நாள்-17.03.2022
Case No.OS. 154/2014
DW.1 –தியாகராஜன் –வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கின் 1ம் வாதி சுமதி என்னுடைய மனைவி என்றால் சரிதான். அவருக்காகத்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் நானும் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவருக்காக நான் சாட்சியம் அளிப்பதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கு மருத்துவ ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி வாங்கிய சொத்தில் எனது மனைவிக்கும் பாகம் உண்டு என வழக்காடுகிறேன். எனது மனைவிக்காக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் மனுபோட்டு அனுமதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் அனுமதி பெறாததால் நான் சாட்சியம் அளிக்க அருகதையில்லை என்றால் சரியல்ல. வெங்கண்ணரெட்டி எனது மாமனார். அவருக்கு வேதவதி, ஸ்ரீதர், சுமதிபாய் ஆகியோர்கள் வாரிசுகள். எனது மாமனார் 1988 ல் காலமாகிவிட்டார். அவர் 1988 ல் இறந்துவிட்டார் , அவருக்கு 3 பேர்கள் வாரிசுகள் என்பதற்கு ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கின் 3ம் பிரதிவாதி எனது சின்ன மாமனார் மகன். அவரும் நான் தன் சார்பில் சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி அளிக்கவில்லை என்றால் சரிதான். 2014ம் வருடம் 3ம் பிரதிவாதி ஆயிலம் கிராமத்தின் கவுன்சிலராக இருந்தார். தாவா சொத்து அவர் கவுன்சிலராக இருக்கும் வார்டுக்கு உட்பட்டது என்று சொன்னால் சரிதான். வெங்கண்ணரெட்டி மகள் வேதாவதி எப்போது இறந்துவிட்டார் என்றால் 2010 லேயே காலமாகிவிட்டார். அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள ஆயிலம் கிராமத்தில்தான் நானும் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு எனது தாத்தா வாங்கிய வீடு. எங்கள் வீட்டிற்கும் , தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் எனது பக்கத்து வீடு இடையில் சந்து மட்டும்தான் உள்ளது. வாதி அந்த இடத்தை ஸ்ரீதர் இடமிருந்த வாங்கி சுத்தம் செய்த விவரம் எனக்கு தெரியும். 2012 ல் அந்த சொத்தை வாங்கினார். 2014 ல் வீடு கட்டினார். சொத்தை கிரையம் வாங்கியவுடன் எந்த ஆட்சேபனையும் நான் செய்தேனா என்றால் கடக்கால் போடும்போதுதான் சொத்தை வாங்கிய விவரம் எனக்கு தெரியும். கடக்கால் போட்டவுடன் வழக்கு அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆற்காடு நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன். தாவா சொத்தில் பங்கு உள்ளது என்று வாதிக்கு எதிராக

வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கு நிலுவையில்தான் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் 2017ம் வருடம் வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னால் நான் மனு தா்க்கல் செய்துள்ளேன். அந்த மனு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. வாய்தா தேதி தெரியாது. நான் சொல்வதுபோல் மனு எதுவும் போடவில்லை என்றும் வாய்தா தேதி எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு நான் தாக்கல் செய்யும்போது வேதாவதி உயிருடன் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்யும்போது வேதாவதி உயிருடன் இருப்பதுபோல்தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அவரது வாரிசுகளுக்கு எதிராகத்தான் தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் வேதாவதி இறந்ததை மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு எனது மாமனார் பெயரில் பட்டா இருந்தது. அதற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது)